**10.** முழு முதல் தொகை (Corpus Fund) இன்னும் சேர்க்கப்பட முயற்சி எடுக்கப்படும்.

**11.** இவ்வாண்டு தரமான விற்பனையாகக் கூடிய **புதிய நூல்கள்** ISBN எண்ணுடன் வெளியிடப்படும்.

**12.** கல்விச் சுரங்கத்தின் தற்போதைய விற்பனையை இரண்டு மடங்காக்க உழைப்போம்.

## ஆயர் பேரவையின் அனுமதிக்கு

### • சொந்த அச்சகம்

தமிழக ஆயர் பேரவையின் அரவணைப்பில் நம் வாழ்வுக்கென்று புதிய அச்சகத்தை ஏற்படுத்தி தருவதற்கு.

### • நம் வாழ்வு ஞாயிறு

ஒவ்வொரு ஆண்டும் பத்திரிகையாளர்களின் பாதுகாவலரான் புனித பிரான்சிஸ் சலேசியாருடைய திருநாளை ஒட்டி ஜனவரி 24 ஆம் தேதி வாக்கில் தமிழகத் திருஅவையில் நம் வாழ்வு ஞாயிறு கொண்டாடுவதற்கு ..

### • பங்குகளிலும் துறவற இல்லங்களிலும்

தமிழகத்தில் உள்ள அனைத்து பங்குகளிலும் துறவற இல்லங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் குறைந்தப்பட்சம் ஒரு சந்தாவைச் செலுத்தி நம் வாழ்வை வாங்குவதற்கு..

### • யூடியூப் சேனல் தொடங்குவதற்கு

நம் வாழ்வு வார இதழை அடுத்தக்கட்டத்திற்கு கொண்டுச் செல்லவும், இளைய தலைமுறையை திரு அவையோடு இணைக்கவும் சமூகச் சிந்தனையை விதைக்கவும் நம் வாழ்வுக்கென யூடியூப் சேனல் தொடங்குவதற்கு...

## 20. COMMISSION FOR LAITY

Chairman: Most Rev. Dr. Neethinathan
Secretary: Rev. Fr. Lourdusamy

## 1. பணிக்குழுவின் செயல்பாடுகள்:

### 1.1. பொதுநிலைத் திருப்பணியாளர் தொடர் பயிற்சி:

பொதுநிலைத் திருப்பணியாளர் பயிற்சி 2016-2018 இரண்டு ஆண்டுகள் நடத்தப்பட்டது. இதில் 22 பொதுநிலையினர் பயிற்சி பெற்றனர். 20 கட்டங்களாக நடத்தப்பட்டது. திருவழிபாடு, மறைக்கல்வி, அருளடையாளங்கள், திருஅவை சட்டம், திருஅவை வரலாறு, விவிலியம், இறையியல், பொதுநிலையினரின் திருப்பணிகள் போன்ற 20 தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. களப்பணி ஆய்வறிக்கை அனைவராலும் சமர்ப்பிக்கப்பட்டது. 2018 ஜுலை 27 அன்று தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழுவின் தலைவர் மேதகு ஆயர் நீதிநாதன் இப்பயிற்சியை நிறைவு செய்த அனைவருக்கும் சான்றிதழ் வழங்கினார்.

### 1.2. கருத்தாளர் தொடர் பயிற்சி:

மறைமாவட்டத்தில் கருத்தாளர் குழு உருவாக்கும் வகையில் கருத்தாளர் தொடர் பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சி 8 கட்டங்களாக நடத்தப்பட்டது. 16 மறைமாவட்டத்திலிருந்து பங்கேற்பாளர்கள் பங்கேற்றனர். 20 தலைப்புகளில் பேராசிரியர்கள் பயிற்சி அளித்தனர். இதில் தொடர்ந்து பங்கேற்ற 46 பங்கேற்பாளர்களுக்கு 2019 ஏப்ரல் மாதம் 27-ம்தேதி தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழுவின் தலைவர் மேதகு ஆயர் நீதிநாதன் அவர்கள் சான்றிதழ் வழங்கினார்.

### 1.3. மண்டலக் கருத்தரங்குகள்:

**“பொதுநிலையினரின் திருப்பணிகள்”** என்ற தலைப்பில் மண்டல அளவில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. பொதுநிலையினர் திருஅவை, சமூகம், அரசியல் ஆகிய தளங்களில் ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது

| வ. எண் | தேதி | இடம் | மண்டலம் | பங்கேற்பாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| **1.** | **21.10.2018** | வள்ளியூர் | **(பாளை மண்டலம்)** தூத்துக்குடி, கோட்டாறு, குழித்துறை, பாளையங்கோட்டை | **60** |
| **2.** | **04.11.2018** | சென்னை | **(சென்னை மண்டலம்)** செங்கல்பட்டு, வேலூர், பாண்டி, சென்னை | **116** |
| **3.** | **10.02.2019** | திருச்சி | **(திருச்சி மண்டலம்)** திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம் | **65** |
| **4.** | **31.03.2019** | சேலம் | **(கோயம்புத்தூர் மண்டலம்)** சேலம், ஊட்டி, தர்மபுரி, கோயம்புத்தூர் | **320** |
| **5.** | **06.04.2019** | மதுரை | **(மதுரை மண்டலம்)**திண்டுக்கல், மதுரை சிவகங்கை, | **80** |

### 1.4. மறைமாவட்டக் கருத்தரங்கு:

**"இன்றைய மதவாதச் சூழலில் பொதுநிலையினரின் கடமைகள்"** என்ற தலைப்பில் மறைமாவட்டக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந்திய மற்றும் தமிழக அரசியல் நிலை ஆய்வு செய்யப்பட்டது. இன்றைய மதவாத சூழலில் பொதுநிலையினரின் பங்கு மற்றும் பணிகளைப் பற்றி, விளக்கம் அளிக்கப்பட்டது. தமிழக ஆயர்கள் பேரவையின் 2019 பாராளுமன்ற தேர்தல் நிலைப்பாடு, தீர்மானங்கள் அடிப்படையில் பயிற்சி அளிக்கப்பட்டது. குழுக்கள் அமைத்து மக்களை வழிநடத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

### 1.5. அஞ்சல்வழி இறையியல் கல்வி:

இத்திட்டத்தில் திருத்தியமைக்கப்பட்ட முழுமையான இறையியல் கல்வி 22 பாடநூல்களாக அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகள் நடத்தப்படும் இத்திட்டத்தின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும். கட்டுரை வடிவில் பதில் அனுப்பி வருகின்றனர். 17 மறைமாவட்டத்திலிருந்து 1331 நபர்கள் பங்கேற்று பயிற்சி பெறுகின்றனர். நான்கு பாடங்கள் அனுப்பப்பட்டுள்ளது.

### 1.6. பொதுநிலையினர் ஞாயிறு:

ஆண்டுதோறும் புனித தாமஸ்மூர் திருவிழாவிற்கு பின் வரும் ஞாயிறு பொதுநிலையினர் ஞாயிறாகக் கொண்டாடப்படுகிறது. **"பொதுநிலையினரின் தலைமைத்துவத்தை வளர்த்தெடுப்போம்"** என்னும் மையச் சிந்தனையின் அடிப்படையில் 30.06.2019 அன்று இவ்விழா கொண்டாடுவதற்கான சுவரொட்டிகள், திருவழிபாட்டுக் குறிப்புகள், துண்டுப் பிரசுரங்கள் அனைத்தும் மறைமாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டன.

## 2. சிறப்பு நிகழ்வுகள்

### 2.1. மாநில ஆய்வரங்கம்:

இன்றைய அரசியல் சூழலையும் பாராளுமன்றத் தேர்தலையும் கருத்தில் கொண்டு தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு **"இன்றைய மதவாதச் சூழலில் பொதுநிலையினரின் கடமைகள்"** என்னும் மையச் சிந்தனையில் 2019 ஜனவரி 26, 27 பொதுநிலையினர் உருவாக்க மையத்தில் மாநில ஆய்வரங்கம் நடைபெற்றது. பணிக்குழுவின் தலைவர் மேதகு ஆயர் நீதிநாதன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். இந்த ஆய்வரங்கத்தில் கீழ்கண்ட தலைப்புகளில் சிந்தனையாளர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள்

1. **இந்திய அரசியலில் மதவாத அரசியல் - வரலாற்றுப் பார்வை**
2. **மதவாத அரசியலும் சிறுபான்மையினரின் உரிமைகளும்**
3. **இன்றைய மதவாத அரசியலில் அடித்தள மக்கள் நிலை**
4. **இந்திய அரசியல் அமைப்புச் சட்டமும் இந்துத்துவா அரசியலும்**
5. **மதவாத சவால்களும் எதிர்நோக்கும் வழிமுறைகளும்**

இதில் தமிழகத்தின் 18 கத்தோலிக்க மறைமாவட்டத்திலிருந்து 200 பேர் கலந்து கொண்டனர்.

### 2.2. பொதுநிலைத் திருப்பணியாளர் மறுமலர்ச்சி தியானம்:

பொதுநிலைத் திருப்பணியாளர் சான்றிதழ் பெற்ற 5-குழுக்களுக்கு (1999–2018) மறுமலர்ச்சி தியானத்துடன் கூடிய பயிற்சி 2019 மார்ச் 09, 10 ஆகிய தேதிகளில் பொதுநிலையினர் உருவாக்க மையத்தில் நடைபெற்றது. **சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், திண்டுக்கல், கோட்டாறு, குழித்துறை, கும்பகோணம், மதுரை, ஊட்டி, பாண்டி, பாளையங்கோட்டை, சேலம் சிவகங்கை, திருச்சி, தூத்துக்குடி** ஆகிய மறைமாவட்டங்களிலிருந்து 60 பங்கேற்பாளர்கள் பயிற்சியில் பங்கேற்றார்கள்.

### 2.3. சிறப்புக் கருத்தாளர் பயிற்சி:

கடந்த 2013-2014, 2015-2016 ஆண்டு கருத்தாளர் சான்றிதழ் பயிற்சி பெற்றவர்களுக்கான சிறப்பு கருத்தாளர் பயிற்சி 2019 மார்ச் 16, 17 ஆகிய தேதிகளில் பொதுநிலையினர் உருவாக்க மையத்தில் நடைபெற்றது. இதில் 13 மறைமாவட்டங்களிலிருந்து கருத்தாளர்கள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

### 2.4. பாராளுமன்ற தேர்தல் செயல்பாடுகள்:

23.03.2019 அன்று மதுரையில் நடைபெற்ற கிறித்தவர் வாழ்வுரிமை இயக்கக் கூட்டத்தில் 17-வதுபாராளுமன்ற தேர்தலில் தமிழக திருச்சபையின் நிலைப்பாடு மற்றும் தீர்மானங்கள் குறித்து கலந்தாய்வு நடைபெற்றது. அதில் செயலர் தந்தை உரையாற்றினர். **"சமய சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஆதரவு"** என்ற ஆயர்கள் பேரவை நிலைப்பாட்டை தமிழக கிறிஸ்தவ வாழ்வுரிமை இயக்கத்துடன் இணைந்து பல மறைமாவட்டங்களில் பரப்புரை செய்யப்பட்டது.

### 2.5. What'sup: (வாட்ஸ்அப்)

தமிழக பொதுநிலையினர் பணிக்குழு தகவல் பரிமாற்றத்திற்கு **"TAMILNADU LAITY"** என்ற பெயரில் Whatsup **கட்செவி** அமைத்து உள்ளது. பணிக்குழுவின் செயல்பாடுகள், செய்திகள் அனைத்தும் தொடர்ந்து அளிக்கப்படுகிறது.

### 2.5. தேசிய பொதுநிலையினர் மாநாடு

தேசிய பொதுநிலையினர் பணிக்குழு 29 செப்டம்பர் முதல் 2 அக்டோபர் - 2018 வரை மும்பை பாந்திரா தியான இல்லத்தில் தேசிய மாநாட்டை நடத்தியது. அனைத்து மாநிலங்களிலிருந்தும் பங்கேற்பாளர்கள் கலந்துக் கொண்டனர். தமிழகத்திலிருந்து செயலர் சு. லூர்துசாமி அடிகளாருடன் 17 பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர்.. தமிழக பொதுநிலையினர் பணிக்குழுவின் செயல்பாட்டு அறிக்கையை அனைவரும் புகழ்ந்து பாராட்டினார்கள். தமிழக பங்கேற்பாளர்கள் திறன்களையும் ஈடுபாட்டையும் தேசிய பணிக்குழுத் தலைவர் மேதகு ஜெரால்டு மத்தியாஸ் பாராட்டினார்.

## 3. சந்திக்கும் சவால்கள் பிரச்சனைகள்

- பணிக்குழுவின் பயிற்சிகளுக்கு நிதி போதாக்குறை.
- உருவாக்க மையத்தை பழுது பார்ப்பதற்கு போதிய நிதி வருவாய் இல்லை.
- சான்றிதழ் பயிற்சி பெற்றவர்களுக்கு பங்கில் வாய்ப்பு வழங்குவதில்லை.
- தொடர் பயிற்சித் திட்டங்களுக்கு புதிய பயிற்சியாளர்கள் பங்கேற்பது இல்லை

# 4. திட்டமிட்டச் செயல்பாடுகள் - 2019-2020

## 4.1. தலைமைத்துவ சான்றிதழ் தொடர் பயிற்சி:

**“பொதுநிலையினரின் தலைமைத்துவம்”** என்ற தலைப்பில் ஓராண்டில் 12 தலைப்புகளில் 18 மறைமாவட்டத்திலிருந்து 72 (18X4 =72) பங்கேற்பாளருக்கு தொடர் பயிற்சி அளிக்கப்படும். களப்பணி ஆய்வறிக்கை சமர்ப்பித்தப்பின் சான்றிதழ் வழங்கப்படும்.

## 4.2. மறைமாவட்டக் கருத்தரங்கு:

**“பங்கேற்பு அமைப்புகள், இயக்கங்களில் பொதுநிலையினரின் பணிகள்”** என்ற தலைப்பில் 18 மறைமாவட்டங்களில் கருத்தரங்கு நடத்தப்படும். பங்கு பேரவையிலிருந்து 2 பங்கேற்பாளர்கள் மறைமாவட்டக் கருத்தரங்கில் கலந்துக் கொள்வார்கள். இக்கால சூழலுக்கு ஏற்ப பங்கேற்பு அமைப்பு இயக்கங்களை கட்டியெழுப்ப பயிற்சி அளிக்கப்படும்.

## 4.3. மண்டலக் கருத்தரங்கு:

**“திருஅவை, சமூக, அரசியல் தளங்களில் பொதுநிலையினரின் தலைமைத்துவம்”** என்ற தலைப்பில் 5 மண்டலங்களில் கருத்தரங்கு நடத்தப்படும். மண்டலத்தில் உள்ள மறைமாவட்ட அருள்பணி பேரவையிலிருந்து பங்கேற்பாளர்கள் கருத்தரங்கில் கலந்து கொள்வார்கள்.

## 4.4. அஞ்சல்வழி இறையியல் கல்வி:

தொடர்புக் கருத்தரங்குகள் மண்டல மையங்களில் உள்ள அருள்பணி நிலையத்தில் நடைபெறும். பயிற்சியாளர்கள் மிகுதியாக உள்ள மறைமாவட்டங்களில் மறைமாவட்ட மையத்தில் பயிற்சி அளிக்கப்படும்.

## 4.5. பொதுநிலைத் திருப்பணியாளர்கள் மறுமலர்ச்சி தியானம்:

மறைமாவட்டத்தில் பணியாற்றும் திருப்பணியாளர்களுக்கு மறுமலர்ச்சி தியானம் பொதுநிலையினர் உருவாக்க மையத்தில் அளிக்கப்படும்.

## 4.6. சிறப்புக் கருத்தாளர் பயிற்சி:

சான்றிதழ் பெற்று கருத்தாளர் பணியாற்றுகின்ற தலைவர்களுக்கு இன்றைய சவால்களை சந்திக்கும் வகையில் சிறப்பு பயிற்சி அளிக்கப்படும்.

# 5. ஒப்புதல் பெறுதல்:

**5.1. தமிழக பொதுநிலையினர் பணிக்குழு நடத்தும் பயிற்சிகளில் மறைமாவட்ட அமைப்புகளில் உள்ள 50 வயதிற்கு உட்பட்ட புதிய பயிற்சியாளர்களுக்கு வாய்ப்பளித்தல்.**

**5.2. காலத்தின் தேவைக்கேற்ப பதிவு செய்யும் பொதுநிலையினருக்கு பயிற்சிக் கட்டணத்துடன் பல்வேறு பயிற்சிகள் அளித்தல்.**

## 21. LAITY COUNCIL

**Patron: Most Rev. Dr. Neethinathan**
**President: Mr. Arokiasamy**

| எண் | 1. தொடர் செயல்பாடுகள் (Regular Activities) | குறிப்பு (Remarks) |
|---|---|---|
| 1. | மறைமாவட்டங்களில் பல்வேறு பணிக்குழுக்கள், பக்த சபைகள், சங்கங்கள், அமைப்புகள், செயல்பட்டு வருகின்றன. இவை பொதுநிலையினர் பேரவையோடு ஒன்றிணைந்து திறம்பட செயல்பட ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளையும் வழிமுறைகளையும் இப்பேரவை வழங்கி வருகிறது. இது மட்டுமல்லாமல் பொதுநிலையினர் உருவாக்க மையத்தின் வாயிலாக பல்வேறு பயிற்சிகள் தந்து பொதுநிலையினர், மறைமாவட்டங்களில் ஆயருடனும் மறைமாவட்ட அமைப்புகளுடனும் இணைந்து செயலாற்ற இப்பேரவை உதவி வருகின்றது. | தொடர் செயல்பாட்டினை அந்தந்த மறைமாவட்ட அளவில் பொது நிலையினர் பேரவை முன்னெடுத்து செயல்படுத்தி வருகின்றது. பெரும்பான்மையான மறை மாவட்ட ஆயர்கள் தொடர்ந்து ஆலோசனைகளையும் உதவி களையும் வழங்கி வருகின்றனர்.<br><br>மாநில அளவில் பொது நிலையினர் பேரவைக்கான புரவலர் ஆயர் மேதகு நீதிநாதன் ஆண்டகை அவர்களால் அப்போதைக்கப் போது ஆலோசனை மற்றும் கருத்துரைகள் வழங்கப் படுகின்றன. |

| 2. | **இவ்வாண்டின் (2018– 2019) சிறப்பு செயல்பாடுகள்**<br><br>**(Significant achievements in this year)** | பயன்கள் (Benefits) |
|---|---|---|
| அ. | அரசியல் விழிப்புணர்ச்சியை கத்தோலிக்க மக்கள் அனைவரும் பெறவேண்டும். அரசியலில் பங்கெடுத்து அவர்கள் நல்ல குடிமக்களாக உருவாக வேண்டும். அதே நேரத்தில் 2019 பாராளுமன்றத் தேர்தலில் நமது பங்களிப்பான வாக்குரிமையை தவறாது பன்படுத்துவதிலும், தகுதியும், திறமையும் வசதியும் உள்ள கத்தோலிக்க நபர்களை போட்டியிடச் செய்வதிலும் முனைப்பாக பேரவை விழிப்புணர்வு தந்து வந்தது. மேலும் உள்ளாட்சி அமைப்பில் அவர்களை வளர்த்தெடுக்க பல்வேறு கட்ட பயிற்சிகள், கருத்தரங்குகள் மற்றும் ஆய்வரங்கம் மூலம் மாநில அளவிலும், மறைமாவட்டத்திலும் தரப்பட்டன. | பாராளுமன்ற தேர்தலில் நம கத்தோலிக்கரை அந்தந்த பகுதிகளில் போட்டியிடச் செய்வதில் தி.மு.க.காங்கிரஸ் கூட்டணியில் கத்தோலிக்கர்<br><br>களுக்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லை. |
| ஆ. | நம் சிறுபான்மையின கிறித்துவ பிள்ளைகள் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படிக்கும் பொழுது சிறுபான்மையினர் நலத்துறை வழங்கும் கல்வி உதவித் தொகையினை கணிசமாக பெற இப்பேரவை வழிகூறி வருகின்றது. இக்கல்வி உதவித் தொகையினை (மெட்ரிக் பள்ளியில் படித்தாலும் நிதி உதவி பெறாத பள்ளியில் படித்தாலும்) சிறுபான்மையினர் நலத்துறை வழங்கி வருகின்றது. இதனைப் பற்றி பொதுநிலையினர் பேரவை ஒவ்வொரு மாவட்டத்திலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது. | சிறுபான்மைத்துறை வழங்கும் கல்வி உதவித்தொகை எல்லா மாணவருக்கும் கிடைக்கச் செய்வதே இப்பேரவையின் நோக்கமும், முன் எடுப்பும் ஆகும். இதற்காக இப்பேரவை தகவல் உரிமை சட்டத்தின் மூலம் பல தகவல்களை பெற்று அரசிடம் கோரிக்கை வைத்துள்ளது நல்ல பலனை தரும் என எதிர்பார்க்கலாம். |
| 3. | எதிர்கொண்ட பிரச்சினைகளும் சவால்களும்<br><br>(Challenges and problems faced) | ஆலோசனை (suggestions) |
| **அ.** | பொதுநிலையினர் பேரவை விதியினை திருத்தி வெளியிடுவதில் தொடர்ந்து தாமதம் ஏற்படுவதால் பொது நிலையினர் பேரவையைப் பற்றி மறைமாவட்டங்களுக்கு சரியான புரிதலை உரிய நேரத்தில் அளிக்க இயலவில்லை.<br><br>கடந்த காலங்களில் கீழ்க்கண்ட செயல் திட்டங்களை | பொதுநிலையினர் பேரவைத் தலைவரை அந்தந்த மறைமாவட்ட ஆயர் தெரிவு செய்யவும் பிற நிர்வாகிகளை (செயலர்,து.தலைவர், பொருளர் போன்ற பதவிகள்) தேர்தல் மூலமும் தெரிந்தெடுக்க வட்டார அளவில் உறுப்பினர்களை |

| | | |
|---|---|---|
| | நிறைவேற்ற ஆயர் பேரவையிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.<br><br>1. பேரவையின் செயல்பாட்டுக்கு நிதி ஆதார வழிவகை.<br><br>2.ருீளுஊஇ வுீளுஊ தேர்வுக்கு ஒவ்வொரு மறைமாவட்டத்திலிருந்தும் அறிவு கூர்மையுள்ள இளைஞர்களை தேர்வு செய்து நல்ல பயிற்சியை தரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.<br><br>3.தலித் கிறித்துவ மற்றும் மிகவும் பிற்பட்ட (மறவர், வன்னியர்) போன்ற கிறித்தவரை மாநில அரசு வரம்பிற்குள் மிக பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்த்திட மாநில அரசை தொடர்ந்து வற்புறுத்துதல்.<br><br>4.சிறுபான்மை மதத்தை சார்ந்த பிற்பட்ட வகுப்பு கிறிஸ்தவரை பிற்பட்ட வகுப்பிலிருந்து மாநில அரசு வரம்பிற்குள் உள் ஒதுக்கீட்டைக் கேட்டுப் பெறலாம். (குறிப்பாக தலித் கிறிஸ்தவர்கள், வன்னிய கிறிஸ்தவர் இவர்களுக்கு மட்டுமாவது உள் ஒதுக்கீட்டை கேட்டுப் பெறலாம்) நம்முடைய மக்கள் தொகை 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 6.12%.<br><br>5.அரசுப்பணியில் கத்தோலிக்க இளைஞர்களின் வேலைவாய்ப்பு பெருகி பணி பெருமளவில் அமைய கத்தோலிக்க கலை மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சிக் கல்லூரி தொடங்குதல். | செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்து மறைமாவட்ட அளவில் பேரவையாக உருவாக்க பொறுப்புள்ள மறைமாவட்ட அருட்பணி யாளர்களை பேரவைக்கு உதவிட நியமிக்கலாம் .(யளவழசயட ஊநவெசந னுசைநஉவழச.'. ஏ.பு.நுவஉ) இதற்கு விதிகளில் சொல்லப்பட்டுள்ளது.<br><br>எதிர்கொண்ட இச்சவால்கள் ஐந்தினையும் மறு பரிசீலனை செய்ய ஆயர் பேரவை கேட்டுக் கொள்ளப்படுகிறது. |
| 4<br>. | மறைமாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட புதிய முயற்சிகள் (New Initiative from the Diocese)<br><br>தாமதித்து வரும் உள்ளாட்சி மன்ற தேர்தல் விரைவில் நடைபெற உள்ள நிலையில் அந்தந்த மறைமாவட்டத்தில் தேர்தல் கூட்டங்களை பேரவை நடத்தி கத்தோலிக்கர் சிறுபான்மையினர் அதிகமாக உள்ள ஊராட்சி பேரூராட்சி நகராட்சிகளில் உறுப்பினர்களாக மற்றும் தலைவர்களாக போட்டியிட அறிவுறுத்தப்பட்டு வருகிறார்கள். | <u>குறிப்பு (Remarks)</u><br><br>விரைவில் உள்ளாட்சி மன்ற தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற நிலை இருப்பதால் தற்போது தமிழக ஆளுங் கட்சிக்கு அரசியல் முன்னேற்றம் தடைபட்டு வருவதாலும் மேலும்பல்வேறு புதிய கட்சிகள் தொடங்கப் பட்டு வருவதால் நம் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் வெளிப்படையாக உள்ளாட்சி தேர்தலில் கணிசமாக போட்டியிட்டு நம்முடைய பலத்தை உள்ளாட்சி தேர்தலில் |

| | | |
|---|---|---|
| | | மெய்ப்பித்துக் காட்டலாம்.. |
| 5. | 2019-2020 செயல்திட்டம் (Plan for 2019-2020)<br><br>எல்லா மறைமாவட்டங்களிலும் பொதுநிலையினா் பேரவை திருத்திய விதிமுறைப்படி அமைக்கப்பட்டு இன்னும் ஒருசில மாதங்களில் அனைத்து மறைமாவட்டங்களும் முழுவீச்சுடன் செயல்படவும் மறைமாவட்டம் சாா்ந்த திட்டங்கள், உதவிகள் தவிர அரசு திட்டங்கள் தலித் மக்களுக்கு கிடைக்கக் கூடிய திட்டங்கள் அரசியல் பங்களிப்பை உறுதி செய்தல் போன்றவற்றை மக்களுக்கு சென்றடைய மறைமாவட்ட கூட்டங்களிலும், மாநில பயிற்சியின்போதும் அவ்வப்போது கூறப்பட்டு வருகின்றது. தொடா்ந்து ஆண்டு முழுவதும் செயல்பட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. | எதிா்பாா்க்கும் பயன்கள்<br><br>(Expected outcome)<br><br>----------------------------------<br><br>ஒவ்வொரு மறை மாவட்டத்திலும் நடைபெறும் பணிக்குழு கூட்டத்தில் அருட்பணி.'.பேரவையில் பொது நிலையினா் பேரவையையும் (தலைவா் அல்லது செயலா்) கலந்து கொள்ள அந்தந்த மறைமாவட்டங்கள் அவசியம் வாய்ப்பளிப்பதின் மூலம் எதிா்பாா்க்கும் பயன் கிட்டும். |

6. <u>தேவைப்படும் ஒப்புதல்கள் (Approval Required)</u>

<u>நோக்கம் (Purpose)</u>

அ. மாநில அளவில் திருத்திய பொதுநிலையினா் பேரவை விதிக்கு முழு அளவில் ஒப்புதல் தேவைப்படுவதுடன் மாநில விதியைப் பின் பற்றி அந்தந்த மறைமாவட்ட சூழலுக்கு எற்ப மறைமாவட்ட பொதுநிலையினா் பேரவை விதியினை வகுத்தெடுத்து இப்பேரவையை உயிரோட்டமுள்ள பேரவையாக வளா்த்தெடுக்க பேரவை விதியினை உடனே வெளியிட ஆயா்

<u>(Policy matter)</u>

பணிக்குழுக்கள் செய்யும் பணிபோல் பேரவையும் அது சாா்ந்த சபை, குழுக்கள், கழகங்கள், அமைப்புகள்,இயக்கங்கள் போன்றவை செய்திடும் பணிக்கு அங்கீகாரம் மறைமாவட்டம் கொடுப்பதி

| | | |
|---|---|---|
| | பேரவையிடம் இப்பேரவை ஒப்புதல் வேண்டுகிறது. | கொடுப்பதின் மூலம இப்பேரவையை அங்கீகாரமுள்ள அர்த்த முள்ள பேரவையாக மறை மாவட்டத்திற்குள் எடுத்துச் செல்ல முடியும். |
| ஆ. | தமிழக கத்தோலிக்க பொதுநிலையினரில் துறைவாரியான வல்லுநர்களை இனம் காணுதல்.<br>ஒவ்வொரு துறையிலிருந்தும் சுமார் 5 பேர் உள்ளடக்கிய வல்லுநர் குழுவை தமிழ்நாடு அளவில் ஏற்படுத்துதல். | தமிழ்நாட்டில் நிகழும் சமூக,அரசியல், பொருளாதார,கலாச்சாரம் குறித்த பிரச்சனைகளில் வல்லுநர்கள் துணையோடு பொதுநிலையினர் பேரவை ஆய்வு செய்து ஆயர் பேரவை ஒப்புதலுடன் நிலைப்பாடு எடுத்து அறிவித்தல். |
| இ. | இவை தவிர கடந்த ஆண்டுகளில் ஆயர் பேரவையில் வைக்கப்பட்ட 5 கோரிக்கைகள்.˙.<br>ஆலோசனைகள் இதுவரை நிலுவையில் உள்ளது. (ஏற்பட்ட சவால்கள் என்னும் தலைப்பில் மேலே பத்தி 3 பிரிவு ஆ-ல் குறிப்பிடப்பட்டுள்ளது). | பேரவையின் சார்பில் வைக்கப்பட்ட இவ் ஆலோசனைகளை ஆயர் பேரவை கனிவுடன் பரிசீலித்து ஆவன செய்ய இப்பேரவை மீண்டும் வற்புறுத்தி கேட்டுக கொள்கிறது. |

## நிதிநிலை அறிக்கை

இப்பேரவை அரசியல், சமூகம் சார்ந்த ஓர் அமைப்பு என்பதால் பேரவை விதியில் நிதி உதவி பற்றி கூறப்படவில்லை. இருப்பினும் ஓர் அமைப்பு உயிரோட்டமுள்ள அமைப்பாக இயங்க வேண்டும் என்றால் நிதி அவசியம் தேவைப்படுகிறது. எனவே, தற்போது இயங்கும் பொது நிலையினர் பேரவை நிர்வாகிகளும், மறைமாவட்டத்தில் உள்ள பொதுநிலையினர் பேரவையின் முக்கிய நிர்வாகிகளும், ஒருசில ஆயர்களும் தொடர்ந்து நன்கொடை அளித்து வருவதால் எங்களது அவசிய மற்றும் அவசர செலவினை இந்நன்கொடையைக் கொண்டு சிக்கனமாகப் பயன்படுத்துகிறோம். பொதுநிலையினர் பேரவைக்கான குழுக்கூட்டங்களுக்கும் முக்கிய கூட்டங்களுக்கும் வந்துபோகும் பொதுநிலையினர் பேரவை உறுப்பினர்களுக்கு ஆகும். பயணச் செலவை அந்தந்த மறைமாவட்டம் கொடுத்து உதவுகின்றது. இதில் அனைத்து மறைமாவட்டங்களும் உதவி புரிவது மட்டுமல்லாது இப்பேரவையை இயங்க வைத்து வளர்த்தெடுப்பதில் அனைத்து மறைமாவட்டங்களும் தொடர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

நிதி ஆதாரத்திற்கு அந்தந்த மறைமாவட்ட ஆயர்கள் உதவிட கேட்டுக் கொள்கிறேன்.

## 22. COMMISSION FOR WOMEN

**Chairman: Most Rev. Dr. Neethinathan**
**Secretary: Mrs. Angela**

பெண்களின் உருவாக்கத்திற்கு ஏதுவாக பெண்களுக்கு பல வகையான பயிற்சிகள் மாநில, மறைமாவட்ட மற்றும் பங்கு அளவில் நடத்தப்படுகின்றன. கடந்த ஆண்டு பெண்கள் பணிக்குழுவின் செயல்பாடுகளை இந்த அறிக்கையின் மூலம் சமர்ப்பிக்கின்றேன்.

# 1.பயிற்சிகள்

### 1.1 மாநில கருத்தாளர் பயிற்சிகள்

2018 முதல் 2019 வரையிலான மாநில கருத்தாளர் பயிற்சியில் 10 மறைமாவட்டங்களிலிருந்து பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டார்கள். 1.பாலியல் நிகர்நிலை, 2 மத சமூக அடிப்படை வாதம் - பெண்களை பாகுபடுத்துதல், 3.பெண்களின் சீடத்துவ வாழ்வு, 4.கலாச்சாரமும் இளம் பெண்களும், 5.மரியா - பெண்களின் மாதிரி, 6.உளவியல் ரீதியான தன்னம்பிக்கை உருவாக்கம், 7.பெண் சுதந்திரம் - ஒரு விமர்சனப் பார்வை, 8.சாதியப் பாகுபாட்டால் பெண்கள் சுரண்டப்படல் குறைந்த கூலி, பாலியல் சீண்டல், 9.திரு அவையின் வாழ்விலும் பணியிலும் பெண்களின் பங்கேற்பு, 10.பெண்களின் அரசியல் தலைமை போன்ற தலைப்புகளில் சிறந்த கருத்தாளர்களைக் கொண்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன. மாதத்திற்கு 2 நாட்கள் என 8 மாதங்களில் நடைபெற்ற கருத்தாளர் பயிற்சியில் முழுமையாக பங்கேற்ற 30 பெண்களுக்கு மேதகு ஆயர் டாக்டர் நீதிநாதன் அவர்கள் சான்றிதழ்கள் வழங்கினார்கள்.
2019ல் மூன்று கருத்தாளர் பயிற்சிகள் ஜனவரி, பிப்ரவரி, மார்ச், மாதங்களில் நடத்தப்பட்டுள்ளன. 8 மறைமாவட்டங்களிலிருந்து பங்கேற்பாளர்கள் 60 பேர் கலந்து கொண்டனர்.

### 1.2 மறைமாவட்டங்களில் நடத்திய மாநிலப் பயிற்சிகள்

2018 ஜுன் முதல் 2019 ஏப்ரல் வரை 7 (செங்கல்பட்டு, வேலூர், சிவகங்கை, கும்பகோணம், திருச்சி, தஞ்சாவூர், தூத்துகுடி, ஆகிய மறைமாவட்டங்களில் நடத்திய 10 நாள் பயிற்சிகளில் சுமார் 800 பெண்கள் பயன் பெற்றுள்ளனர். மாநிலத்திலிருந்து இந்த 10 பயிற்சிகளுக்கு ரூ.30,000 நிதி உதவி செய்யப்பட்டது.

## 1.3 மண்டலக் கூட்டம்

திருச்சபையிலும், சமுதாயத்திலும் பெண்களின் இன்றைய நிலை, பெண்களின் உயர் கல்வியும், அரசியல் பங்கேற்பும், என்ற தலைப்புகளில் **பாளை, சென்னை, திருச்சி** ஆகிய மண்டலங்களில் (**குழித்துறை, பாண்டி, திருச்சி** ஆகிய மறைமாவட்டங்களில்) 216 பெண்கள் பங்கேற்று பயன்பெற்றார்கள். ஒவ்வொரு மண்டலக் கூட்டத்திற்கும் மாநிலத்திலிருந்து ரூ.12,000 நிதி உதவி செய்யப்பட்டது.

## 1.4 பாலியல் கல்வி

தூத்துகுடி, கும்பகோணம், சிவகங்கை, வேலூர், திருச்சி, ஆகிய மறைமாவட்டங்களில் 135 பள்ளிகளில் பாலியல் கல்வி மற்றும் பெண்களின் தன்னிலைசார் விழிப்புணர்வு பற்றி மேல் நிலை / உயர் நிலைப் பள்ளி மாணவிகளுக்கு பயிற்றுவிக்கப்பட்டது. ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் சுமார் 5500 மாணவிகள் பயன் பெற்றனர். இப்பயிற்சிக்கு பள்ளிகளில் நல்ல வரவேற்புள்ளது, ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் 15 பள்ளிகளில் இப்பயிற்சி நடைபெறுகிறது. மாநிலத்திலிருந்து ரூ.15,000 நிதி உதவி செய்யப்படுகிறது.

## 1.5 செயற்குழு, பொதுக்குழு கூட்டம்

செயற்குழு, பொதுக்குழுக் கூட்டம் 2018 ஆம் ஆண்டு ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களில் பிராட்டியூரில் நடைப்பெற்றது.

# 2.சிறப்பு நிகழ்வுகள்

## 2.1 பெண் குழந்தைகள் தினம்

**செப்டம்பர் 8- 2018 "சமுதாய சூழ்நிலை மாற்றங்களும் பெண் குழந்தைகள் வளர்ப்பும்"** என்ற தலைப்பில் பெண் குழந்தைகள் தினம் மாநிலம் முழுவதும் கொண்டாடப்பட்டது. திருச்சி மண்டலத்தால் தயாரிக்கப்பட்டு, மறைமாவட்டங்கள் மூலம் அனைத்து பங்குகளிலும் கொண்டாட துண்டுபிரசுரம், வழிபாட்டுகுறிப்புகள், மற்றும் சுவரொட்டிகள் மறைமாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டது. பங்குகளில் ஒர் ஆண்டிற்குள் பிறந்த பெண் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்க ஆலோசனை அளிக்கப்பட்டது.

## 2.2 அகில உலகப் பெண்கள் தினம்

மார்ச் 8- 2019 அகில உலகப் பெண்கள் தினத்தையொட்டி **"பெண்களே சமூகத்தின் முகவரி"** என்ற தலைப்பில் மாநிலம் முழுவதும் கொண்டாடப்பட்டது. மதுரை மண்டலத்தால் துண்டுபிரசுரம், வழிபாட்டு குறிப்புகள், சுவரொட்டிகள் தயாரிக்கப்பட்டு மறைமாவட்டங்கள் மூலம் அனைத்து பங்குகளுக்கும் அனுப்பப்பட்டது. பெண்கள் தினம் பங்குகளிலும், மறைமாவட்டங்களிலும் சிறப்பாக கொண்டாட தூண்டுதல் தரப்பட்டது.

## 2.3 C.B.C.I பொதுக்குழு கூட்டம்

2018 செப்டம்பர் 29 முதல் அக்டோபர் 1 வரை தேசிய பெண்கள் பணிக்குழு கூட்டம் (CBCI) கோவாவில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தமிழக ஆயர் பேரவையின் பெண்கள்

பணிக்குழு சார்பாக மாநில செயலர், திருமிகு.ஆஞ்சலா சவரிராஜ் மற்றும் சென்னை உயர் மறைமாவட்ட பெண்கள் பணிக்குழு செயலர் முனைவர்.ஆரோக்கியமேரி ஆகியோர் கலந்து கொண்டனர். மாநில செயலர் தமிழக ஆயர் பேரவையின் பெண்கள் பணிக்குழுவின் சென்ற ஆண்டு செயல்பாட்டு அறிக்கையை சமர்ப்பித்தார்.

## 2.4 மறைமாவட்ட செயலர்களின் அறிக்கையிலிருந்து

1. 3 பெண்களுக்கு தையல் மெஷின்கள் இலவசமாக வழங்கப்பட்டன.
2. மருத்துவ முகாம், இரத்ததான முகாம் நடத்தப்பட்டது.
3. சில மறைமாவட்டங்களில் பொங்கல் விழாவானது பெண்கள் பணிகுழுவினரால் கிராமங்களில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

# 3. சாதனைகள்

1. பங்குகளில் கொடுக்கப்படும் பயிற்சிகளுக்கு வரும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
2. தமிழகத்தில் 10வது 12 வது அரசு தேர்வில் முதல் மதிப்பெண்கள் பெற்ற கும்பகோணம் மறைமாவட்டத்தில் பட்டியல் வகுப்பைச்சார்ந்த சிறுமிகள் மூவருக்கு தேசிய செயலர் அருட்சகோதரி.தலிஷா பண முடிப்பும், விருதுகளும், சான்றிதழ்களும், வழங்கினார்கள்.
3. மாநிலத்திலிருந்து நிதி உதவி செய்ததின் பயனாக 100க்கணக்கான பெண்கள் மறைமாவட்ட பயிற்சிகளில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.
4. மாநிலமும், மறைமாவட்டமும் ஒருங்கிணைந்து செயல்படுவது பல வளர்ச்சிக்கான பணிகளை சாதிப்பதற்கு உறுதுணையாக உள்ளது.

# 4. சவால்கள்

1. ஒரு சில மறைமாவட்டங்களில் பெண்கள் பணிக்குழு தனித்து இயங்க தனி அலுவலகமும், முழு நேர பணியாளர்களும், அலுவலக தளவாடங்களும் இல்லாமை.
2. சில மறைமாவட்டங்களில் கத்தோலிக்க பெண்களிடையே விழிப்புணர்வையும், ஈடுபாட்டையும் அதிகரிக்க போதுமான நிதி வசதி இல்லாமை.
3. சமூகத்தில் நிலவுகின்ற மூடப்பழக்கங்களிலிருந்து விடுபட விழிப்புணர்வு இல்லாமை
4. பயிற்சி பெற்றோருக்கு பங்கிலும், மறைமாவட்டத்திலும் அங்கீகாரம் இன்மை.

# 5. எதிர்காலத் திட்டங்கள்

1. வரதட்சனை ஒழிப்பு, பாலியல் மற்றும் குடும்ப வன்முறை ஒழிப்பு முதலியனவற்றிற்கு எல்லா மறைமாவட்டங்களிலும் முயற்சி எடுத்தல்.
2. பெண்ணிய விடுதலை மற்றும் சமத்துவத்திற்காக முனைப்புடன் உழைக்கும் நோக்குடைய பிற சமூக அமைப்புகளுடன் கைகோர்த்து வலுவான செயல் திட்டங்களுக்கு வழி வகுத்தல்.
3. பெண்கள் பணிக்குழுவில் ஆர்வமுள்ள பெண்களை தேர்வு செய்து அவர்களை அரசியலில் பங்கேற்க விழிப்புணர்வு கொடுத்தல்.

4. மேல்நிலை பள்ளி படிப்பை முடிக்காமல் இடையில் நிறுத்திய மாணவிகளுக்கு படிப்பை தொடர உதவுதல்.
5. உயர்நிலை / மேல்நிலை பள்ளி மாணவிகளுக்கு பாலியல் கல்வியுடன், ஜனநாயகம் மற்றும் அரசியல் விழிப்புணர்வு பயிற்சிகள் அளித்தல்.
6. மண்டலக் கூட்டங்கள்

# 6. பரிந்துரை

1. பெண்கள் பணிக்குழு மற்றும் பொதுநிலையினர் பணிக்குழு நடத்தும் பயிற்சிகள் முடித்தவர்களை மறைமாவட்ட செயலராக பணி அமர்த்தவும்.
2. பிராட்டியூரில் நடக்கும் மாநில பயிற்சிகளுக்கு 18 மறைமாவட்டங்களில் இருந்தும் பெண்களை அனுப்பும்படியும்.
3. மறைமாவட்ட பெண்கள் பணிக்குழுவின் செயலராக பெண்களை மட்டுமே நியமிக்கவும்.
4. மறைமாவட்ட பங்குப்பேரவை அமைப்பில் 50 விழுக்காடு உறுப்பினர் உரிமையை பெண்களுக்கு கொடுக்கவும்.
5. ஒவ்வொரு மறைமாவட்ட ஆயரும் சிறப்பு கவனம் செலுத்தி பெண்கள் பணிக்குழுவின் செயல்பாடுகளை ஊக்குவிக்கவும் பரிந்துரைக்கின்றோம்.

## 23. COMMISSION FOR FAMILY

**Chairman: Most Rev. Dr.Thomas Aquinas**
**Secretary: Sr.Clementia, FSPM**

**OBJECTIVES:**

- To promote Christian family values to achieve the purpose of making families as a domestic church
- Empowerment of young men and women in Christian faith, offering formation to the youngsters to form a good value based life style and promoting God fearing families.
- To prevent divorce among couple.
- To help the couple to be faithful to their marital promises and live with unconditional love.
- To make use of the Media in a matured way.

**REGULAR ACTIVITIES**

1. **Annual General body meeting:**
   The AGBM was held in the month of June 2018 under the leadership of **Most Rev. L. Thomas Aquinas**. All the secretaries and Resource persons from Tamilnadu region were participated. Input sessions were conducted.

2. **Marriage Encounter Week End Programme (MEWE):**
   It was conducted for married couple. The Trained unit couples and ME unit priest conduct the programme. At the end of each session the couples were given time for reflection and sharing. The participants benefit immensely from this programme. Priests and religious revitalized their relationship with the people of God and developed and even deeper appreciation for their own vocation.

3. **Training of Trainers:**
   It was conducted once in a year for two days for all the diocesan secretaries and resource persons. Under the leadership of **Most.Rev.Lawrence Pius,** the National Chairman for Family Commission. The TNBC secretary for Family Commission and CCBI secretary for

Family Commission organised the training programme. The certificates are issued for the participants.

4. **National Biennial Conference:**
The National Biennial Conference started with inaugural mass by Regional Chairman **Most.Rev.Dr.L.Thomas Aquinas and National Chairman Most.Rev.Lawrence Pius.** The theme was **Collaborative Family Ministry.** It was organised by CCBI Commission for Family & Couple for Christ Movement. The regional secretaries, diocesan directors and secretaries were participated from all over India.

5. **Marriage Preparation Class & Parent's Training Programme:**
These programme are conducted regularly in all dioceses of Tamilnadu. The regional secretary goes to many diocese and take classes on Family Spirituality, Media, Nature Family Planning methods and ill effects of abortion.

6. **Couple Training Programme:**
This programme is being conducted in all diocese for married couples, especially who have completed 5-10 years. The experienced couples are invited as resource persons.

7. **The 38th World Wide Marriage Encounter conference:**
It was held at Trichy, Charismatic Retreat Centre in Tamilnadu, with Inaugural Mass concelebrated by **Bishop Lawrence Pius** and 18 ME Team Priests. The conference continued with the theme **As I Have Loved You.** There were 120 couples participated. This programme was organised by Trichy unit couples and secretary for TNBC Commission for Family.

8. **Couples Conference:**
Couples conference was organised for a day at Sivagangai diocese under the Leadership of **Most Rev.Soosai Manickam**. The regional secretary addressed the gathering. There were 200 couples who celebrate their Tin Jubilee, Silver & Golden Jubilee participated.

9. **Holy Family Feast:**
The Holy Family Feast was celebrated in Selam diocese, at Azhagapuram parish. The secretary TNBC commission for family addressed the gathering. This feast is being celebrated almost in all diocese of Tamilnadu.

10. **Retreat during the season of lent:**
One day retreat was conducted in the diocese of Pondicherry & Trichy. The Healing service was conducted at Pondicherry diocese by the regional secretary with her congregation sisters. The parishners were comforted and went with peace. This programme is being conducted in all diocese during the season of Lent.

11. **Governing Body Meeting:**
The AGBM was held in the month of January 2019 under the leadership of **Most Rev. L. Thomas Aquinas**. All the secretaries and Resource persons from Tamilnadu region were participated. Input sessions were conducted.

12. **Silver & Golden Jubilee** was celebrated for married couples in all diocese of Tamilnadu.

13. In many diocese, counselling centre & parish **Family Cell** is functioning successful.

**14.** In few diocese, **Naveena Suyamvaram** was conducted with good results.

**15.** A meeting was organised in Chenglepet diocese for the MPC resource persons under the Leadership of **Most Rev.Neethinathan**. We discussed on MPC & Couples Training Programme syllabus to conduct in advanced manner as per the need of time.

**16.** **Value Education & Sex Education:**
It is being conducted in all diocese of Tamilnadu successfully for students in Schools & Colleges.

**17. Society Registration Renewal was done.**

**PLANS FOR 2019-20**

- ME National Conference will be conducted in Pune by October 2019.
- Seminar for the Diocesan secretaries and Resource persons on family ministry scheduled to be conducted twice a year i.e June and Jan-2020
- T.O.T (Training of Trainers) on Marriage preparation course will be conducted in the month of Aug 2019 for three days.
- Value education, sex education and HIV/AIDS awareness programmes in schools to be continued.
- Continue all other programmes as usual.
- Retreat for couples and prayer meeting will be conducted on regular basis to strengthen the Spiritual Life in all dioceses.
- The parish Family Cell will be organised in all diocese

**FOR BISHOPS APPROVAL**

- Year of Media to be announced in the Church. So that we could conduct training for the people to use media in matured way.
- We propose the medical check up to be done for the would be couples and to get medical certificates before marriage. This practice will reduce Infertility & Sexually Transmitted Diseases.
- The couples training programme to be continued for married couples specially who completed 5-10 years of their married life. This will reduce divorce and separation among couples.
- When the would-be couples go for writing marriage form to the priest, the would be couple should discuss privately with priest. So that divorce could be avoided after marriage.

## 24. EMMAUS SPIRITUALITY CENTRE

**Chairman: Most Rev.Dr. Antony Pappusamy**
**Secretary: Rev. Fr. I. Francis Xavier**

Emmaus spirituality centre (Regional) is being guided by Tamilnadu catholic Bishop's conference from the beginning of its origin for the vibrant mission of the catholic renewal. We strongly believe that our centre is energized by the Holy Spirit for the great mission of our catholic church.

We are focusing on deepening our identity in all the aspects of our vibrant mission here. Our spirituality centre organizes healing services, recollections, Gospel Power services, Spiritual training programs and retreats for all. Our centre remains as a significant place for many pilgrims, Religious, pious associations and faithful thus they open themselves to the transforming power of Christ love and Mary's intercession. It is a place of encountering God and everyone feel energized and blessed.

### A) REGULAR ACTIVITIES

#### i) <u>New Moon day prayer service</u>

Every new moon day is a great occasion and great vigil for us. It starts at 6.00 p.m with rosary and Holy mass. In this full night prayer service the faithful not only pray for spiritual and physical healings but also for miracles. They too feel the power the Holy Spirit during the spiritual adoration in particular.

We give more importance to Eucharistic adoration during which lot of healing believe to take place .We also emphasize Marian devotion in all the prayer sessions.

During this prayer service we pray for sick people individuality. Lot of faithful give their genuine witness through which they strengthen their faith.
We always invite different resource persons for every event. Gradually the number of participants increased up to 1200.

#### ii) <u>First Saturday Prayer Meeting</u>

Prayer meeting is valuable for the church as a whole and for the individuals who participate. This prayer meeting is particularly for people who are suffering from inner conflicts, ill health and family problems. Thus we give importance to preaching and healing. The people who missed the new moon day vigil are the main participants of this prayer meeting.

Ever since it is started people show lot of interest and participate with full spirit. This prayer service starts at 9.30 a.m ends at 4.30 p.m, about 150 people participate regularly and receive God's blessing. During this service we give them free meals and Beverages.

**iii) Every month three days Inmate retreat**

It is a retreat to untie the bondage of sins and make people free. This retreat is to be held third weekend of every month. This retreat is organized for the people who attend this with their family. During this period the participants could find more time to spend with our Lord Jesus Christ and to spend time in listening to the Word of God. Few fathers are always available to give them spiritual direction and to hear confession. All those attend this retreat go home happily. We also give importance to lift the people to come here with suicidal tendencies.

**iv) Lenten season programe**

During the season of lent our Emmaus team goes to different parishes to conduct charismatic retreats and conventions to all over Tamilnadu.

**v) Counseling**

We do encourage people to go for counseling. We strongly believe that all human counseling ultimately finds its inspiration in the person of Holy Spirit. The participants who desire a catholic approach we provide counseling from the catholic perspective.

**vi) Magazine**

We have a tamil monthly publishing every month, called 'Emmaus'. It contains articles of Holy Spirit, Bible quiz, testimonies of miracles in the centre and centre's programme.We are dispatching 3000 copies every month to all over Tamilnadu, Malaysia and France. Through this monthly, many people can come to know the activities of our centre.

**B. SIGNIFICANT ACHIEVEMENTS IN THIS YEAR**

**i) Vincent de Paul Society annual gathering**

In the month of November our centre organized the annual gathering of Vincent de Paul Society of the arch diocese of Pondy and Cuddalore. We started this seminar with the motto of "Join with your fellow Vincentians".

The leaders of different Parishes and members have shared their thoughts and ideas about Vincentian life, spirituality and mission.

They focused their mission in the meeting especially serving the neighbors where they live and home visits of the needy. It was a magnificent experience for us all. About 500 vincentians participated from the entire arch diocese of Pondicherry and Cuddalore. The meeting lasted from 10.00 am to 04.30 pm.

### ii) Legion of Mary Annual gathering

In the month March 2019 our Emmaus Centre hosted one of the largest gatherings of 2019. This meeting was organized in the Spirit of Faith and Union with Mary and their founder.

Different presidium and Curios of 1300 legionaries participated in this annual gathering. The legionaries realized that there is a great need to extend and develop their apostolate in the arch diocese of Pondicherry and Cuddalore.

The striking point was the visible attendees from different background, young and matured gathered together under one roof. Different inputs were given to the legionaries by different priests. The meeting lasted for 6 hrs since morning 10.00 am and ended at 04.30 pm with Holy mass.

### iii) Rejuvenating Course for Presentation Sisters

Six just retired Coimbatore Presentation Sisters have attended the rejuvenating course in our centre in the month of March 2019.
This course focused on their self – Confidence, inner peace and joy, acceptance of oneself, vocation and knowing oneself. After the course they too realized their strength that is left over in them. The course lasted for 4 days and it was very useful for them too.

### iv) Annual retreat to Sisters of Jesus Congregation

Emmaus Centre hosted the annual retreat of Sisters of Jesus in the month of September 2018. The retreat facilitators are Fr. Francis Xavier and Fr. Lourdu Xavier both shared wonderful thoughts on ministry, mission and the personal experience with Jesus Christ in a charismatic way. We insisted on the need of a personal encounter with Jesus as the basis of any ministry. They too were given a clear insight about 'know thyself' which attracted most of the sisters in a deep manner. The retreat lasted for 6 days and fifty sisters attended this retreat.

### v) Annual Retreat of Medical Mission Sisters

(German sisters from Chetpet)
The retreat took place in the month of November – 2018 in our centre. They did their annual retreat in two groups. We focused on the theme of "The Christian life is based on love to others, not love to oneself ". We guided them to be happy nuns and help them to experience the joy of being religious. It was a wonderful retreat for them.

### vi) Lourdu T.V Programme

Every week Wednesday and Thursday from 11.00 am to 12.00 noon our talks are being telecasted in Lourdu T.V Pondicherry. Through this ministry we could reach many people and could spread the good news of Jesus. Lot of people come to know about Emmaus Spirituality Centre and its activities through this ministry. We hope and pray that this ministry continues in the future.

### vii) Madha T.V Programme

Every month second Tuesday our centre's Holy Mass and preaching is being telecasted in madha T.V at 1.00 p.m – 2.00 p.m .

viii) Volunteers training programme

This programme took place in Emmaus Spirituality Centre in the month of December 2018. This volunteers training programme is an faith filled program which empowers individuals with knowledge and confidence to become dynamic contributors and facilitators for every spiritual program in the centre. We have got about 70 volunteers from different parishes. This training program also helped them to be effective in body language, voice modulation and communication namely perception, observation and expression. We are so grateful for those volunteers and their service to our Emmaus Spirituality Centre.

ix) Pastoral Ministry in Mugaiyur and Ayanthur parishes

Every month first Friday and first Tuesday our Emmaus team goes to Mugaiyur and Ayanthur to conduct charismatic prayer service and holy mass. It has been arranged from Jan 2019 to Dec 2019. Our team takes up the whole ministry of these two days in those parishes. We could witness the good response from the parishners and other people.

x) Three days Mega Convention ( Jan 15, 16, 17 – 2019)

Our centre's primary aim is to draw people of God for personal holiness through which experience the gifts of the Holy Spirit. This is our intention to organize this 3 days mega convention.
In order to achieve this convention we had lot of spiritual and external preparation.

a. Spiritual preparation

i) Every day spiritual adoration by our members.
ii) Special prayer is said in the holy mass.
iii) We printed prayer cards and hand outs and circulated among all the pilgrims.

b. External Preparation

i) Visited almost 50 parishes and invited the parishers.
ii) We advertised in MADHA TV, LOURDU TV and NAMVAZVU monthly.
iii) Volunteers fixed wall poster in many parishes.

c. Event

The celebrants and speakers include Bishops Most. Rev. Dr. Antony Anantharayar (Arch Bishop of Pondy), Most. Rev. Dr. Neethinathan (Bishop of Chengulpet) and Priests Rev. Fr. Octavious and Rev. Fr. Adaikalam and a lay preacher Sr. Vimala. All of them delivered wonderful message to the participants. It was a great experience to the participants to hear the brand new words of Jesus and experience the gifts of the Holy Spirit. About 3500 people have participated from different parishes. It was very grand successful event of our centre.

xi) New Evangelization Training programme

Our Holy father Francis insisted in his exhortation Evangeli Guadim "Evangelization is the task of the church, every Baptized individual needs to be an agent of evangelization to transcend ourselves to the mystery rooted in the Blessed trinity". Having this thought in our mind, we organized this new evangelization programme in our centre in the month of June

2019. With the help of Rev. Fr. Panneer selvam executive secretary CCBI commission for proclamation.

Rev.Fr. Panneer selvam and his crew influenced the 35 participants to the core of the event. It lasted for 5 days and brought good fruits to the participants. It was a great event of our centre.

**xii) Ministry in Malaysia**
**(Charismatic Retreat at Penang Diocese – Malaysia)**
We are invited by catholic charismatic renewal group of Penang diocese for ten days programme from 22nd April to 1st May 2019. Three days charismatic leaders programme were conducted at St. Anne's Church, Penang diocese on the topic of Baptized and sent (MK 6:15). 130 leaders were participated in the seminar. On May 1st, catholic charismatic renewal rally was conducted at St. Lourd;s Church, Ipoh. More than 2000 people were participated in this one day prayer meeting. It started at 09.00 am and ended at 06.00 pm. All were filled with the Holy Spirit.

**xiii) Solar off – Grid 20 KW System installed in Emmaus Spirituality Centre**

We have installed most reliable and high yielding solar system (20KW) off – Grid in our spirituality centre with the help of a German diocese. By God's grace this project has been realized in a fruitful way. The entire project has been handled by KC Kopar Company from Kerala. This energy is obtained from sun and turned to electrical energy.

Now we have enough solar electrical energy since March – 2019. We are so grateful to the donars and all who helped us to realise this project and above all we are very grateful to our mother nature as well.

